Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate, Tiruttani
CC.No. 395/2025

Deposition of Witness for : PW8

Name :-Dr. கனிமொழி

Husband's Name :-ஹரிபிரசாத்

Village & Taluk :-பாண்டிச்சேரி

Caste : Calling :-Assistant Surgeon, Gingee Government Hospital

Religion : Age :34

Accused called absent. 317 Cr.P.C. petition filed and allowed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13/07/2026

**முதல் விசாரணை**

நான் தற்போது Gingee Government Hospital ல் Assistant Surgeon, ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2025 ஆம் தேதியன்று திருத்தணி அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சையில் நான் பணிபுரிந்த போது திரு.முருகேசன், திரு.ராஜபாண்டியன் ஆகிய இருவரும் சாலை விபத்தில் காயம்பட்டு மேற்படி மருத்துவமனைக்கு வந்த நபர்களுக்கு திரு.முருகேசன் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். திரு.ராஜபாண்டியன் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி திரு.ராஜபாண்டியன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று நான் காயச்சான்று அளித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்து என்னிடம் மேற்படி இருவரின் விபத்து பதிவேடுகள் மற்றும் ராஜபாண்டியனின் காயச்சான்றினை பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் 2 விபத்து பதிவேடுகள் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த விபத்து பதிவேடுகள் அ.சா.ஆ 3 மற்றும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காட்டப்படும் ராஜபாண்டியன் என்பவரின் காயச்சான்று நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர்களை எந்த காவலர்கள் அழைத்து வந்தார்கள் என்றால் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வரபட்டார்கள். காயம்பட்ட நபர்களுக்கு நான் தான் முதலுதவி சிகிச்சை அளித்தேன். மேற்படி நபர்கள் சிகிச்சைக்கு என்னிடம்

வந்தபோது குடிபோதையில் இருந்தார்கள் என்றால் சரிதான். குடிபோதையில் இருக்கும் போது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டால் அந்த நபருக்கு சிகிச்சையின் பலன் கிடைக்குமா என்றால் கிடைக்கும். போலீசார் என்னிடம் எனது பெயர், பதவி, விலாசம் ஆகியவற்றை கேட்டுபெற்றார்கள் என்றால் சரிதான். வேறு எதுவும் விசாரிக்கவில்லை காயச்சான்றுகளை பெறும் போது போலீசார் என்னிடம் வழக்கு பற்றி விசாரித்தார்கள். மேற்படி விசாரித்தபோது அதனை எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். போலீசாரிடம் நான் கொடுத்ததாக பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் காயத்தின் நீளம், அகலம், ஆழ விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை விபத்து பதிவேட்டில் தெரிவித்துள்ளேன்.

**மறுவிசாரணை :** இல்லை.

Typed to my dictation in open court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd./K.Venkatesan
Judicial Magistrate,
Tiruttani